செ.வெ.எண்.381/2021 நாள் : 09.09.2021

# ரூ.109.71 கோடி மதிப்பீட்டில் பிரதான திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கட்டடுமானப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் புதியதாக உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. அனைத்து துறை அலுவலகங்களும் தற்காலிக கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்த நிலையில் திருப்பத்தூர் நகரில் ரூ.109.71 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் பிரதான மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கட்டடுமானப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகர சர்வே எண்.325-ல் 10.38 ஏக்கர் பரப்பளவு உள்ள பகுதியில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் பிற துறை அலுலைகங்களுக்கான கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு ரூ.109.71 கோடியில் அரசினால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணியானது 18.01.2021-ல் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த கட்டிடமானது தரைதளம் மற்றும் ஏழு தளங்களையும் சேர்த்து மொத்தம் 2,94,565 சதுரஅடி பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தில் வருவாய்துறை, ஊரக வளர்ச்சித்துறையினை சேர்த்து 25 துறை அலுவலகங்கள் செயல்பட ஏதுவாக கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டிடத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டரங்கம், அலுவலர்களுக்கான கூட்டரங்கம், மேல்தளங்களுக்கு செல்வதற்கு வசதியாக தேவையான படிகட்டுகள், மின்தூக்கிகள், மாற்று திறனாளிகளுக்கான சாய்தளம் மற்றும் தேவையான கழிவறை கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. இதர வசதிகளான பூங்கா மற்றும் புல்வெளி, கட்டிடத்தினை சுற்றிலும் சாலை, நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் அமைப்பு, கழிவு நீர் சுத்திகரிப்பு அமைப்பு, முகப்பு அலங்கார வளைவு, அணுகுசாலை போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது. இப்பணிக்கு 18 மாதம் ஒப்பந்தகாலம் வழங்கப்பட்டு 17.07.2022-ல் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே 17.05.2022-ல் முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த ஜி.எம்.எஸ் எலகண்ட் பில்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் கட்டுமானப்பணியில் ஈடுப்பட்டுவருகிறது. இப்பணியில் பொறியாளர்கள் மற்றும்

பணியாளார்கள் என சுமார் 400 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பணியானது தற்போதுவரை 35 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டட பணியில் பயன்படுத்தப்படுகிற கம்பிகள், தண்ணீர், எம்சாண்டு, சிமெண்ட் உள்ளிட்ட அனைத்து கட்டுமான பொருட்கள் பரிசோதனை செய்து தரமாக கட்டபடுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்ட பிரதான மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் தரை தளம் 3454.00 சதுர மீட்டர் பரப்பளவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், தேர்தல் அலுவலகம், தபால் அலுவலகம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், மாவட்ட கருவூலம், ATM கூடிய வங்கி, மக்கள் குறைத்தீர்வு கூடம் ஆகிய அலுவலகங்கள் கட்டப்படும். முதல் தளம் 3820.00 சதுர மீட்டர் பரப்பளவில் மாவட்ட கருவூம் அலுமலகம், மாவட்ட வழங்கல் அலுவலகம், P.G.R.C. அலுவலகம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகம், சிறப்பு திட்ட அலுவலகம், மாவட்ட சமுக நல அலுவலகம், Elcot மையம், முத்திரைதாள் அலுவலகம், உதவி இயக்குநர்(கணக்கெடுப்பு), கலந்தாய்வு கூடம், மைய பாதுகாப்பு அறை ஆகிய அலுவலகங்கள் கட்டப்படும். இரண்டாம் தளம் 3548.00 சதுர மீட்டர் பரப்பளவில் மாவட்ட ஆட்சித்தலைவா் அறை, மாவட்ட வருவாய் அலுவலர் அறை, நேர்முக உதவியாளர் (பொது), நேர்முக உதவியாளர் (கணக்கு, கலந்தாய்வு அரங்கு, நில பிரிவு அலுவலகம், உதவி இயக்குநர் (தணிக்கை), சிறு கூட்டரங்கம் ஆகிய அலுவலகங்கள் கட்டப்படும்.

மூன்றாம் தளம் 3327.00 சதுர மீட்டர் பரப்பளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் அறை, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), நேர்முக உதவியாளர் (சிறு சேமிப்பு) உதவி இயக்குநர் (தமிழ் வளர்ச்சி) ஆகிய அலுவலகங்கள் கட்டப்படும். நான்காம் தளம் 3327.00 சதுர மீட்டர் பரப்பளவில் இணை இயக்குநர் (கூட்டுறவு சங்கம்), மாவட்ட பதிவுத்துறை அலுவலகம், உதவி இயக்குநர் (புள்ளியியல்) அலுவலகம், கோட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்), போதை தடுப்பு அலுவலகம், வீட்டுவசதி வாரியம், கூட்டுக்கல்வி அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் கட்டப்படும். ஐந்தாம் தளம் 3726.00 சதுர மீட்டர் பரப்பளவில் மாவட்ட கிராமபுற ஆரோக்கிய அலுவலகம், பொது மேலாளர் (தாட்கோ), கணக்கெடுப்பு அலுவலகம், முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம், மாவட்ட கல்வி அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் கட்டப்படும். ஆறாவது தளம் 3548.00 சதுர மீட்டர் பரப்பளவில் இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை), இணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை), உதவி இயக்குநர் (கைத்தறி), உதவி இயக்குநர் (பட்டு வளர்ச்சி), உதவி இயக்குநர் (தோட்டக்கலை), உதவி இயக்குநர் (வேளாண்மை) ஆகிய அலுவலகங்கள் கட்டப்படும். ஏழாவது தளம் 2626.00 சதுர மீட்டர் பரப்பளவில் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த

குழந்தைகள் வளர்ச்சி திட்டம்), புள்ளியியல் ஆய்வாளர் அலுவகம், செயற்பொறியாளர் (Slum Clearance), மாவட்ட தொழில் மையம், அருங்காட்சியகம், கூட்ட அரங்கம் ஆகிய அலுவலகங்கள் என மொத்தம் 27,376.00 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இவ்வலுக வளாகத்தில் மொத்த நிலப்பரப்பு 10.38 ஏக்கர் (அ) 42,000 சதுர மீட்டர் அமைக்கப்பட உள்ளது.

மேலும் 3 பெரிய கூட்டரங்கம் 200 நபர்களுக்கு மேல் அமரும்வகையில் இருக்கை வசதி, குறைதீர்வு கூட்டரங்கம் 300 நபர்கள் அமருவகையில் இருக்கை வசதி, 3 சிறிய கூட்டரங்கங்களில் 150 அமரும்வகையில் இருக்கை வசதி, கழிவறை வசதிகள், செயற்கை நீரூற்றுடன் கூடிய பூங்கா மற்றும் புல்வெளி, கட்டடத்தினை சுற்றிலும் சாலை வசதி, நடைபாதை மற்றும் மழைநீர் வடிகால் அமைப்பு, அலங்கார விளக்குடன் கூடிய தெரு விளக்குகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, திசைகாட்டி மற்றும் பெயர் பலகைகள், கழிவு நீர் சுத்தீகரிப்பு நிலையம், முகப்பு அலங்கார வளைவு மற்றும் அணுகுசாலை போன்ற வசதிகள் அமைக்கப்படவுள்ளது.

மேலும் மாவட்ட ஆட்சியர் அறைகளின் அளவு மாவட்ட ஆட்சயரின் நேர்முக உதவியாளர் அறைகளின் அளவு சரியாக உள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகளை தரமாகவும் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவும் முடிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

இந்த ஆய்வின்போது வட்டாட்சியர் திரு.பழனி, பொதுப்பணித்துறை உதவி பொறியாளர்கள் திரு.நாகராஜன், திரு.அருண்காந்தி, ஈரோடு ஜிஎம்எஸ் நிறுவன திட்ட மேலாளர் திரு.முத்து மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம்.**